




admin@dhinakani.com

RNI-TNTAM/2023/88253

நமது தினகனி

NAMADHU DHINA KANI

www.dhinakani.com

காலை நாளிதழ்








| Vol: 03 | Issue: 159 | 4 Pages | 7.1.2026 | Wednesday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825 |
|---|---|---|---|---|---|---|
| மலர்: 03 | இதழ்: 159 | 4 பக்கங்கள் | 7.1.2026 | புதன்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825 |




**நெடும்புனலுள் வெல்லும் முதலை அடும்புனலின்**
**நீங்கின் அதனைப் பிற**

**விளக்கம்:**
**ஆழமுள்ள நீரில் முதலை மற்ற உயிர்களை வெல்லும், ஆனால் நீரிலிருந்து விலகிவந்தால் அந்த முதலையையும் மற்ற உயிர்கள் வென்றுவிடும்.**

## நள்ளிரவில் வீட்டுக்குள் புகுந்து 3 பேரை மிதித்து கொன்ற காட்டு யானை



ராஞ்சி, ஜன.7

ஜார்க்கண்ட் மாநிலம் கோயில்கேரா பகுதியில் குந்த்ரா என்பவர் வனப்பகுதிக்குள் மரத்தால் அமைக்கப்பட்ட வீட்டில் வசித்து வருகிறார். இவருக்கு திருமணமாகி மனைவி, 3 மகள்கள் உண்டு. இந்த நிலையில், நள்ளிரவில் இவரது வீட்டுக்குள் காட்டு யானை ஒன்று புகுந்தது. அந்த யானை, குந்த்ரா மற்றும் அவரது இரு மகள்களை மிதித்து கொன்றது.

தாய், யானையின் தாக்குதலில் இருந்து தப்பிவிட்டார். மற்றொரு மகள் யானைதாக்கியதில் படுகாயமடைந்து மருத்துவமனையில் சிகிச்சைபெற்று வருகிறார். இந்த சம்பவம் அப்பகுதியில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. யானைதாக்கி தந்தை, இரு மகள்கள் உயிரிழந்த சம்பவம் தொடர்பாக போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர். கடந்த இரண்டு வாரங்களில் காட்டு யானைகள் தாக்கி 7 பேர் உயிரிழந்துள்ளதால், அந்தப் பகுதி மக்கள் அச்சத்துடனே வசித்து வருகின்றனர்.

## ஜனவரி 9ம் தேதி ரேசன் கடைகள் திறப்பு – உணவு வழங்கல் துறை அறிவிப்பு

தமிழகத்தில் உள்ள அனைத்து ரேசன் கடைகளும் வரும் ஜனவரி 9ஆம் தேதி (வெள்ளிக்கிழமை) வழக்கம்போல் திறந்திருக்கும் என உணவு வழங்கல் துறை இயக்குநர் அறிவித்துள்ளார். பொங்கல் பண்டிகையை முன்னிட்டு, பொங்கல் பரிசுத் தொகுப்பு ஜனவரி 8ஆம் தேதி முதல் விநியோகிக்கப்பட உள்ளதால், பொதுமக்கள் சிரமமின்றி பொருட்கள் பெற வசதியாக இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. மேலும், கூட்ட நெரிசலை தவிர்க்க அனைத்து ரேசன் கடைகளிலும் தேவையான முன்னேற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது

## ரோடு ஷோ, பொதுக்கூட்டங்கள்: புதிய நெறிமுறைகள் – அரசாணை வெளியீடு




அரசியல் கட்சிகள் நடத்தும் பொதுக்கூட்டங்கள் மற்றும் ரோடு ஷோக்களுக்கு விதிமுறைகளை வகுத்து தமிழக அரசு அரசாணை வெளியிட்டுள்ளது.

வரையறுக்கப்பட்ட இடங்களில் பொதுக்கூட்டம் நடத்த 10 முதல் 21 நாட்களுக்கு முன்பாக அனுமதி கோரி விண்ணப்பிக்க வேண்டும். 50 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் பங்கேற்கும் கூட்டங்களுக்கு குறைந்தது 30 நாட்களுக்கு முன்பே அனுமதி பெற வேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது.
ரோடு ஷோ நடத்தும் போது அதன் முழு வழித்தட விவரங்கள், தொடக்கம் மற்றும் நிறைவு இடங்களை விண்ணப்பத்தில் தெளிவாக குறிப்பிட வேண்டும் என்றும் அரசாணையில் கூறப்பட்டுள்ளது.

## காங்கிரஸ் முன்னாள் தலைவர் சுரேஷ் கல்மாடி காலமானார்




மும்பை, ஜன.7

முன்னாள் மத்திய அமைச்சரும் காங்கிரஸ் தலைவருமான சுரேஷ் கல்மாடி(81) புனேவில் உள்ள தீனநாத் மங்கேஷ்கர் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் காலமானார் .

வயது முதிர்வு காரணமாக உடல்நலம் பாதிக்கப்பட்டிருந்த அவர், கடந்த சில நாட்களாக புனேவில் உள்ள ஒரு தனியார் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்தார். இருப்பினும், இன்று அதிகாலை சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்

அவரது உடல் இன்று பிற்பகல் 3.30 மணிக்கு வைகுந்த் ஸ்மஷன்பூமியில் தகனம் செய்யப்பட உள்ளது. இவரது மறைவுக்கு காங்கிரஸ் கட்சியினர் மட்டுமின்றி, பல்வேறு அரசியல் கட்சித் தலைவர்களும் தங்களது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்து வருகின்றனர்.

# நாளை பொங்கல் பரிசுத் தொகுப்பினை வழங்கி முதல்வர் மு.க.ஸ்டாலின் தொடங்கி வைக்கிறார்



சென்னை, ஜன.7

தமிழகத்தில் கடந்த 2021ம் ஆண்டு அதிமுக ஆட்சி காலத்தில் பொங்கல் பண்டிகையையொட்டி, ரேஷன் கடைகளில் அரிசி அட்டைதாரர்களுக்கு பொங்கல் பரிசு தொகுப்புடன் ரூ.2,500 ரொக்கப் பணம் வழங்கப்பட்டது. அதன்பிறகு, சட்டசபை தேர்தலில் வெற்றிபெற்று ஆட்சி அமைத்த திமுக, 2022, 2023, 2024 ஆகிய ஆண்டுகளில்பொங்கல்பரிசுதொகுப்புடன்ரூ.1,000 ரொக்கப் பணத்தை வழங்கியது.

ஆனால், கடந்த ஆண்டு (2025) பொங்கல் பரிசு தொகுப்பு மட்டுமே வழங்கப்பட்டது. ரொக்கப் பணம் எதுவும் வழங்கப்படவில்லை. தமிழகத்தில் வரும் ஏப்ரல் மாதம் சட்டசபை தேர்தல் நடக்க இருப்பதால், பொங்கல் பண்டிகையை முன்னிட்டு பொங்கல் பரிசு தொகுப்புடன் ரொக்கப் பணமும் வழங்கப்படும் என்று பொதுமக்கள் எதிர்பார்த்தார்கள்.

இந்த சூழலில், 2026 பொங்கல் பரிசுத் தொகுப்புக்கு ரூ.248 கோடி நிதியை ஒதுக்கீடு செய்து தமிழ்நாடு அரசு அரசாணை வெளியிட்டது. ஒரு கிலோ பச்சரிசி, ஒரு கிலோ சர்க்கரை மற்றும் ஒரு முழு கரும்பு கொள்முதல் செய்வதற்காக இந்த தொகை ஒதுக்கப்பட்டுள்ளதாக கூட்டுறவுத் துறை தகவல் தெரிவித்தது.

இந்த அறிவிப்பை கேட்டு, பொதுமக்கள் அதிர்ச்சி அடைந்தனர். இந்த ஆண்டு பொங்கல் பண்டிகைக்கு பரிசு தொகுப்பு மட்டும்தானா?, ரொக்கப் பணம் கிடையாதா? என்ற கேள்வி மக்கள் மத்தியில் எழுந்தது பொங்கல் பரிசு தொகுப்புடன் எவ்வளவு ரொக்க பணம் வழங்குவது என்பதுகுறித்துஅமைச்சர்கள்மற்றும்அதிகாரிகளுடன் முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் ஆலோசனை நடத்தினார்.

ஆலோசனையின் முடிவில் ரூ.3 ஆயிரம் ரொக்க பணம் வழங்குவது என்று முடிவு செய்யப்பட்டதாக அதிகாரப்பூர்வ அறிவிப்பு வெளியிடப்பட்டது.

இது தொடர்பாக தமிழக அரசு வெளியிட்டிருந்த அறிக்கையில், "இயற்கையின் முதன்மை வடிவாய் அமைந்த சூரியனுக்கும் உழவர்களின் உழைப்பிற்கு உறுதுணையாய் விளங்கும் கால்நடைகளுக்கும் உலக மக்களுக்கு உணவளித்துப் பசி பிணி போக்கும் விவசாயிகளுக்கும் நன்றி கூறி குடும்ப உறவுகள் ஒன்றிணைந்து உலகத் தமிழர்களால் பன்னெடுங் காலமாகக் கொண்டாடப்படும் பாரம்பரிய உன்னத விழா பொங்கல் திருநாள் ஆகும்.

பொங்கல் விழாவைச் சிறப்பாகக் கொண்டாடிட தமிழ்நாடு அரசு அனைத்து அரிசி குடும்ப அட்டைதாரர்களுக்கும் இலங்கைத் தமிழர் மறுவாழ்வு முகாம்களில் வசிக்கும் குடும்பத்தினருக்கும் பொங்கல் பரிசுத் தொகுப்பாக ஒரு கிலோ பச்சரிசி, ஒரு கிலோ சர்க்கரை மற்றும் ஒரு முழு நீளக்கரும்பு வழங்கிட தமிழ்நாடு முதல்அமைச்சர் அவர்கள் ஏற்கனவே அறிவித்துள்ளார்கள். இதன்மூலம் 2,22,91,710 அரிசி பெறும் குடும்ப அட்டைதாரர்கள் மற்றும் இலங்கைத் தமிழர் மறுவாழ்வு முகாம்களில் வசிக்கும் குடும்பத்தினர் பயன்பெறுவர்.

மேலும், பொங்கல் திருநாளை முன்னிட்டு வழங்கப்படவுள்ள வேட்டி சேலைகள் அனைத்தும் எல்லா மாவட்டங்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. பொங்கல் விழாவை மேலும் சிறப்பாக கொண்டாடிட அனைத்து அரிசி குடும்ப அட்டைதாரர்களுக்கும் இலங்கைத் தமிழர் மறுவாழ்வு முகாம்களில் வசிக்கும் அனைத்து குடும்பங்களுக்கும் பொங்கல் ரொக்கப் பரிசாக ரூ.3000/ வழங்கிட மு.க.ஸ்டாலின் ஆணையிட்டுள்ளார். பொங்கல் திருநாளுக்கு முன்பாக ரொக்கப் பரிசும், பொங்கல் பரிசுத் தொகுப்பும், வேட்டி சேலைகளும் அனைத்து நியாயவிலைக் கடைகள் வழியாக வழங்கிட அனைத்து ஏற்பாடுகளும் செய்ய முதல் அமைச்சர் உத்தரவிட்டுள்ளார்" என்று அதில் தெரிவிக்கப்பட்டிருந்தது. இந்நிலையில் வரும் ஜனவரி 8ம் தேதி சென்னை ஆலந்தூர் ரேஷன் கடையில் பொங்கல் பரிசுத் தொகுப்பினை வழங்கி முதல்வர் மு.க.ஸ்டாலின் தொடங்கி வைக்க உள்ளதாக தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## மாமல்லபுரம் கிழக்கு கடற்கரை சாலையில் பைக் கவிழ்ந்து வாலிபர் பலி



மாமல்லபுரம், ஜன.7

சென்னை, நீலாங்கரையைச் சேர்ந்தவர் பிரபாகரன் (வயது.25) திருமணம் ஆகாதவர், தனியார் கார் ஷோரூமில் வேலை பார்க்கிறார், கானத்தூரில் உள்ள நண்பர் வீட்டு திருமண விழாவிற்கு செல்வதாக வீட்டில் கூறிவிட்டு, தனது இருசக்கர வாகனத்தில் மாமல்லபுரம் கிழக்கு கடற்கரை சாலையில் சென்று கொண்டிருந்தார்., மாமல்லபுரம் அடுத்த இளந்தோப்பு அருகே புலிக்குகை பகுதியை கடந்தபோது, இவரது இருசக்கர வாகனம் கட்டுப்பாட்டைஇழந்துசாலையில்விழுந்தது. இதில், தலையில் அடிபட்டு படுகாயமடைந்தார். தகவலறிந்து அங்கு சென்ற மாமல்லபுரம் போலீசார் அவரைமீட்டு, செங்கல்பட்டு அரசு மருத்துவமனையில் சேர்த்தனர்.

அங்கு சிகிச்சை பலனின்றி, பிரபாகரன் உயிரிழந்தார். மாமல்லபுரம் போலீசார் விபத்து குறித்து விசாரித்து வருகின்றனர்.

## தேனி மாவட்டத்தில் நாம் தமிழர் கட்சியினர் ஆர்ப்பாட்டம்



தமிழ்நாடு முழுவதும் இயங்கி வரும் அரசு போக்குவரத்துக் கழகத்தில் அரசு வாகனங்களில் ஒட்டப்படும் அரசு போக்குவரத்துக் கழகம் என்ற பெயரை மாற்றி தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் என அச்சிட வேண்டும் என்று மாநிலம் முழுவதும் நாம் தமிழர் கட்சியினர் ஆர்ப்பாட்டம் நடத்தி வருகின்றனர்.. இதில் ஒரு பகுதியாக நேற்று ஆண்டிபட்டி பேருந்து நிலையத்தில் பெருவாரியான நாம் தமிழர் கட்சிப் பொறுப்பாளர்கள் திரளாக கலந்து கொண்டு பேருந்து நிலையத்திற்குள் வரும் பேருந்துகளுக்கு தமிழ்நாடு என அச்சிடப்பட்ட ஸ்டிக்கர்களை ஒட்டி தங்களது கோரிக்கையை வலியுறுத்தினர். தமிழர் ஓட்டு மட்டும் வேண்டுமா தமிழ்நாடு என்ற பெயர் வேண்டாமா என்று கோஷங்களையும் கட்சி நிர்வாகிகள் முன் வைத்தனர்.. இதில் 30க்கும் மேற்பட்ட கட்சி நிர்வாகிகளை ஆண்டிபட்டி காவல் துறையினர் கைது செய்தனர்..

## தேனி மாவட்டத்தைச் சேர்ந்த பிளக்ஸ், பேனர் மற்றும் லித்தோ போஸ்ட் கடை உரிமையாளர்கள் மற்றும் மேலாளர்கள் ஆகியோருடன் கலந்தாய்வுக் கூட்டம்



தேனி மாவட்ட காவல் அலுவலகத்தில், தேனி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு. Dr. B. சினேஹாப்ரியா, இ.கா.ப., அவர்கள் உத்தரவின்பேரில், கூடுதல் காவல் கண்காணிப்பாளர் அவர்கள் தலைமையில் , தேனி மாவட்டத்தைச் சேர்ந்த பிளக்ஸ், பேனர் மற்றும் லித்தோ போஸ்ட் கடை உரிமையாளர்கள் மற்றும் மேலாளர்கள் ஆகியோருடன் கலந்தாய்வுக் கூட்டம் நடத்தப்பட்டது.

இக்கூட்டத்தில், பிளக்ஸ் மற்றும் பேனர் வைப்பதற்கான சட்ட விதிமுறைகள் குறித்து விரிவாக எடுத்துரைக்கப்பட்டது .

மேலும், ஜாதி, மதம் மற்றும் அரசியல் ரீதியாகப் பிரச்சினைகளை ஏற்படுத்தும் வகையிலான வாசகங்கள் மற்றும் படங்களை அச்சிடுவது சட்டப்படி குற்றமாகும் என்பதும் வலியுறுத்தப்பட்டது .
அத்துடன், இனிவரும் காலங்களில் விதிமுறைகளை மீறி பிளக்ஸ், பேனர் மற்றும் லித்தோ போஸ்ட் அச்சிடக் கூடாது என கடுமையாக அறிவுறுத்தப்பட்டது . விதிமுறைகளை மீறுவோர்மீது சட்டப்படி கடும் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனவும் எச்சரிக்கை விடுக்கப்பட்டது .

தினகனி



# தேசிய சராசரியைத் தாண்டி தமிழ்நாடு சாதனை
## மாநில திட்டக் குழு அளித்த ஆய்வறிக்கையில் தகவல்

சென்னை, ஜன.7

சுகாதாரம், கல்வி, குடிநீர், மின்சாரம் வினியோகம், வேலை வாய்ப்பு ஆகிய நிலையான வளர்ச்சிக்கான குறியீடுகளில் தேசிய சராசரியை தமிழ்நாடு விஞ்சியுள்ளதாக முதல் அமைச்சர் மு.க.ஸ்டாலினிடம் மாநில திட்டக்குழு அளித்த ஆய்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.



★ தமிழ்நாட்டின் உயர் கல்வி மாணவர் சேர்க்கை இந்தியாவிலேயே அதிகபட்சமாக 47சதவீதம் ஆக உள்ளது.

★ ஊரக வேலை உறுதி திட்டத்தின் கீழ் தேவைப்படுவோருக்கு 100 சதவீதம் வேலை வழங்கப்படுகிறது.

★ கிராமப் புறங்களில் உள்ள வீடுகளுக்குக் குழாய் மூலம் குடிநீர் வினியோகம் 81.87 சதவீதம் ஆக உள்ளது. இது தேசிய சராசரியை விட அதிகம்

5 50 சதவீதத்திற்கு மேல் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி பயன்பாட்டுடன் 100 சதவீத வீடுகளுக்கு மின் இணைப்பு உறுதி செய்யப்பட்டுள்ளது.

★ வேலையின்மை விகிதம் தேசிய சராசரியை விட குறைவாக 4.8 சதவீதமாக ஆக உள்ளது.

# தேயிலை தோட்டத்தில் காயத்துடன் சுற்றித்திரிந்த புலி உயிரிழப்பு

நீலகிரி, ஜன.7

நீலகிரி மாவட்டம் ஊட்டி அருகே போர்த்தி கிராமத்தில் உள்ள தனியார் தேயிலை தோட்டத்தில்காலில்காயங்களுடன் புலி ஒன்று, கடந்த 3 நாட்களாக சுற்றித்திரிந்து வந்தது. இதனால் அப்பகுதி மக்கள் அச்சத்தில் இருந்தனர். புலி குடியிருப்பு பகுதிக்குள் செல்லாமல் இருக்கவும்,



கிராம மக்களின் பாதுகாப்பு கருதியும் நீலகிரி வன அலுவலர் கவுதம் உத்தரவின் பேரில், வனத்துறையினர் தொடர் கண்காணிப்பில் ஈடுபட்டு வந்தனர்.

மேலும் செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்துடன் கூடிய தெர்மல் டிரோன் மூலம் தேயிலை தோட்டத்தில் புலி நடமாட்டம் தொடர்ந்து கண்காணிக்கப்பட்டது. சோர்வாக இருந்த புலியை மயக்க ஊசி செலுத்தி பிடித்து, முதுமலை புலிகள் காப்பகத்துக்கு கொண்டு சென்று சிகிச்சை அளிக்க வனத்துறையினர் திட்டமிட்டு இருந்தனர்.

இந்தநிலையில் நேற்று வனத்துறையினர் டிரோன் மூலம் கண்காணித்த போது, புலி அசைவின்றி இருந்தது. இதனால் வன ஊழியர்கள் அருகில் சென்று பார்த்த போது, புலி உயிரிழந்தது உறுதி செய்யப்பட்டது. அதன் முன்னங்கால்களில் காயம் ஏற்பட்டு எலும்புகள் உடைந்திருந்தன. இதனால் நடக்க முடியாமல் தேயிலை தோட்டத்தில் புலி தஞ்சமடைந்தது தெரியவந்தது. மேலும் புலியின் கண்களிலும் காயம் ஏற்பட்டிருந்தது. இதையடுத்து முதுமலை கால்நடை டாக்டர் ராஜேஷ்கு மார்தலைமையில்புலிக்கு உடற்கூறாய்வு நடந்தது. 2 புலிகளுக்கு இடையே ஏற்பட்டசண்டையில்புலிக்கு பலத்த காயங்கள் மற்றும் உள் காயங்கள் ஏற்பட்டுள்ளதாக அதிகாரி ஒருவர் தெரிவித்தர்.

# பராமரிப்பு பணி: ஈரோடு செங்கோட்டை ரெயில் பகுதியாக ரத்து

ஈரோடு, ஜன.7

ஈரோடு கரூர் இடையே சாவடிப்பாளையம், ஊஞ்சலூர் ஆகிய ரெயில் நிலையங்களில் தண்டவாள பராமரிப்பு பணிகள் நடைபெறுகிறது. இதனால் 6ந் தேதி, 13ந் தேதி, 17ந் தேதி ஆகிய நாட்களில் திருச்சி ஈரோடு, செங்கோட்டை ஈரோடு, ஈரோடு செங்கோட்டை ஆகிய ரெயில்கள் பகுதியாக ரத்து செய்யப்படுகிறது. இதில் திருச்சி ஈரோடு (வண்டி எண்.56809) ரெயில் காலை 7 மணிக்கு திருச்சியில் இருந்து புறப்பட்டு கரூர் வரை இயக்கப்படுகிறது. அதாவது கரூர் முதல் ஈரோடு வரை பகுதியாக ரத்து செய்யப்படுகிறது.



இதேபோல் செங்கோட்டை ஈரோடு (16846) ரெயில் அதிகாலை 5.10 மணிக்கு செங்கோட்டையில் இருந்து புறப்பட்டு கரூர் வரை இயக்கப்படும். அதாவது கரூர் முதல் ஈரோடு வரை பகுதியாக ரத்து செய்யப்படுகிறது. தண்டவாள பராமரிப்பு பணிகள் நிறைவடைந்த பிறகு முன்பதிவு இல்லாத சிறப்பு ரெயிலாக கரூரில் இருந்து ஈரோடு வரை மீண்டும் இயக்கப்படும். மேலும் ஈரோடு செங்கோட்டை(16845) ரெயில் ஈரோட்டில் இருந்து மதியம் 2 மணிக்கு புறப்படுவதற்கு பதிலாக கரூரில் இருந்து 3.05 மணிக்கு புறப்பட்டு செங்கோட்டைக்கு சென்றடையும். ஈரோடு கரூர் பகுதியில் பகுதியாக ரத்து செய்யப்படுகிறது.

இந்த தகவல் சேலம் ரெயில்வே கோட்ட மேலாளர் அலுவலக செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டு உள்ளது.

# அவதூறு வழக்குகள்: சி.வி.சண்முகம் எம்.பி. மீதான விசாரணை அடுத்த மாதம் 6ந் தேதிக்கு ஒத்திவைப்பு

விழுப்புரம், ஜன.7

விழுப்புரம் மாவட்டம் வானூர் தாலுகா ஆரோவில் பஸ் நிலையம் எதிரே கடந்த 10.3.2023 அன்றும், கோட்டக்குப்பம் நகராட்சி திடலில் 1.5.2023 அன்றும் அ.தி.மு.க. சார்பில் பொதுக்கூட்டங்கள் நடைபெற்றது. இக்கூட்டங்களில் பங்கேற்ற முன்னாள் அமைச்சர் சி.வி.சண்முகம் எம்.பி., தமிழக அரசையும், முதல் அமைச்சர் மு.க.ஸ்டாலினை பற்றியும் தரக்குறைவாகவும், அவதூறாகவும் பேசியதாக கூறப்படுகிறது.

இதுதொடர்பாக சி.வி. சண்முகம் எம்.பி. மீது விழுப்புரம் மாவட்ட முதன்மை அமர்வு நீதிமன்றத்தில் அரசு வக்கீல் சுப்பிரமணியம், தனித்தனியாக வழக்கு தொடர்ந்தார். இந்த இரு வழக்குகளும் நேற்று மாவட்ட முதன்மை அமர்வு நீதிமன்றத்தில் விசாரணைக்கு வந்தது. அப்போது சி.வி.சண்முகம் எம்.பி. ஆஜராகவில்லை. அவர் சார்பில் அ.தி.மு.க. வக்கீல்கள் ராதிகா செந்தில், தமிழரசன் ஆகியோர் ஆஜராகி சி.வி. சண்முகம் ஆஜர் ஆகாததற்கான காரணம் குறித்து மனுதாக்கல் செய்தனர்.



மேலும் இவ்வழக்குகளை ரத்து செய்யக்கோரி சுப்ரீம் கோர்ட்டில் மனு தாக்கல் செய்துள்ளதாகவும், இம்மனுக்கள் மீதான உத்தரவு வரும் வரை இவ்வழக்கை விசாரணையை ஒத்திவைக்கும்படியும் அ.தி.மு.க. வக்கீல்கள் மனுதாக்கல் செய்தனர். இதையடுத்து இவ்வழக்குகளை விசாரித்த மாவட்ட முதன்மை அமர்வு நீதிபதி மணிமொழி,

இதன் விசாரணையை அடுத்த மாதம் (பிப்ரவரி) 6ந் தேதிக்கு ஒத்திவைத்து உத்தரவிட்டார்.

# தஞ்சை மாவட்டத்துக்கு இன்று உள்ளூர் விடுமுறை

தஞ்சாவூர், ஜன.7

கர்நாடக சங்கீதத்தின் தந்தை என போற்றப்படும் ஸ்ரீதியாகராஜசுவாமிகளின் நினைவாக ஆண்டுதோறும் திருவையாற்றில் நடைபெறும் ஆராதனை விழாவில், நாடு முழுவதிலும் இருந்து இசைக்கலைஞர்கள், பக்தர்கள், இசை ஆர்வலர்கள் திரளாக கலந்து கொள்கின்றனர். குறிப்பாக பஞ்சரத்தின கீர்த்தனைகள் இசைக்கப்படும் நிகழ்வு, இந்த விழாவின் முக்கிய அம்சமாகும்.

இவ்விழாவை நேரில் காணவும், கலந்து கொள்ளவும் தஞ்சாவூர் மாவட்ட மக்கள் மட்டுமின்றி, அண்டை மாவட்டங்கள் மற்றும் வெளிமாநிலங்களிலிருந்தும் பெருமளவில் மக்கள் வருகை தருவது வழக்கம். இதன் காரணமாக போக்குவரத்து, பாதுகாப்பு மற்றும் பொது ஒழுங்கு தொடர்பான ஏற்பாடுகள் முக்கியத்துவம் பெறுகின்றன.

எனவே தஞ்சாவூர் மாவட்டத்தில் நாளை ஒரு நாள் உள்ளூர் விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது. வரும் 7 ஆம் தேதி, தஞ்சாவூர் மாவட்டத்தில் செயல்பட்டு வரும் அனைத்து அரசு அலுவலகங்கள் மற்றும் கல்வி நிறுவனங்களுக்கு இந்த உள்ளூர் விடுமுறை அமல்படுத்தப்படும் என மாவட்ட நிர்வாகம் அறிவித்துள்ளது.

# நெல்லையில் யூரியா தட்டுப்பாடு விவசாயிகள் வேதனை

சென்னை, ஜன.7

நெல்லை மாவட்டத்தில் யூரியா உள்ளிட்ட உரங்கள் போதிய அளவு இல்லை என விவசாயிகள் வேதனை தெரிவித்துள்ளனர். மேலும், இது தொடர்பாக உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என மாவட்ட கலெக்டரிடம் விவசாய சங்கத்தினர் மனுவை அளித்துள்ளனர்.

அந்த மனுவில், தனியார் நிறுவனங்களில் உரங்களை வாங்கச் சென்றால், கூடுதல் இடுபொருட்களை வாங்க கட்டாயப்படுத்துவதாக விவசாயிகள் குற்றம்சாட்டி உள்ளனர். எனவே யூரியா தட்டுப்பாடு விவகாரம் தொடர்பாக விரைவான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.



# மழை இல்லாததால் வைகை அணை நீர்மட்டம் 48 அடியாக சரிவு

தேனி, ஜன.7

தேனி மாவட்டம் ஆண்டிப்பட்டி அருகே 71 அடி உயரம் கொண்ட வைகை அணை உள்ளது. தேனி, திண்டுக்கல், மதுரை, சிவகங்கை, ராமநாதபுரம் ஆகிய 5 மாவட்டங்களின் முக்கிய நீராதாரமாக இந்த அணை விளங்குகிறது. கடந்த ஆண்டு வடகிழக்கு பருவமழை பரவலாக பெய்ததால் வைகை அணையின் நீர்மட்டம் சீராக உயர்ந்தது.

இதைத்தொடர்ந்து அணையில் இருந்து ராமநாதபுரம், சிவகங்கை மாவட்ட குடிநீர், பாசன தேவைக்காக தண்ணீர் திறக்கப்பட்டது. அதன்பிறகு மதுரை, திண்டுக்கல் மாவட்ட பாசனத்திற்காகவும் கூடுதல் தண்ணீர் திறக்கப்பட்டது. இதனால் அணையின் நீர்மட்டம் வேகமாக சரிந்து வந்தது.



தற்போது அணையின் நீர்ப்பிடிப்பு பகுதிகளில் மழை இல்லை.

இதனால் அணைக்கான நீர்வரத்தும் நின்றுபோனது. ஒருபுறம் கூடுதல் தண்ணீர் திறப்பு, மறுபுறம் நீர்வரத்து இல்லாததால் வைகை அணையின் நீர்மட்டம் தற்போது 48 அடியாக சரிந்துள்ளது. இன்னும் ஓரிரு நாட்களில் மதுரை, திண்டுக்கல் மாவட்ட ஒருபோகம் மற்றும் இருபோக பாசனத்திற்குதண்ணீர்திறக்கப்பட உள்ளது. இதன்காரணமாக அணையின் நீர்மட்டம் மேலும் சரியும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

வேகமாக சரிந்து வரும் வைகை அணை நீர்மட்டத்தை ஈடுகட்டும் வகையில் முல்லைப்பெரியாறு அணையில் இருந்து தேனி மாவட்டத்திற்கு கூடுதல் தண்ணீர் திறக்கப்பட்டுள்ளதாக பொதுப்பணித்துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இது ஆறுதல் அளிக்கும் வகையில் இருந்தாலும் கடந்த ஆண்டை விட இந்த ஆண்டு அணையின் நீர்மட்டம் கிட்டத்தட்ட 17 அடி குறைவாக உள்ளது. இதனால் இருப்பில் உள்ள தண்ணீரை கொண்டு கோடைகாலத்தில் தண்ணீர் பற்றாக்குறை ஏற்படும் அபாயம் உள்ளதாக 5 மாவட்ட மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

# வட்டி மானிய திட்டத்தால் பின்னலாடை ஏற்றுமதி வளர்ச்சி பெறும்: ஏற்றுமதியாளர்கள் நம்பிக்கை



திருப்பூர், ஜன.7

திருப்பூரில் இருந்து பின்னலாடைகள் ஆண்டு ஒன்றுக்கு ரூ.35 ஆயிரம் கோடி அளவுக்கு மேல் ஏற்றுமதி செய்யப்படுகிறது. கொரோனா தொற்று காலத்தை தவிர்த்து மற்ற ஆண்டுகளில் திருப்பூர் பின்னலாடை ஏற்றுமதி மூலம் பல ஆயிரம் கோடி அந்நிய செலாவணி ஈட்டி தரும் நகராக உள்ளது. இங்கு உற்பத்தி செய்யப்படும் பின்னலாடைகள் ஐரோப்பிய நாடுகள் மற்றும் அமெரிக்காவுக்கு அதிக அளவில் ஏற்றுமதி செய்யப்படுகிறது.

இந்த நிலையில், சிறு, குறு மற்றும் நடுத்தர ஏற்றுமதியாளர்களுக்கான வட்டி மானியத் திட்டத்தை மத்திய அரசு உடனடியாக நடைமுறைக்கு கொண்டு வந்துள்ளது. இது ஏற்றுமதி துறைக்கு மிகவும் தேவையான நிவாரணத்தை கொண்டு வருகிறது. ஏற்றுமதிக் கடனுக்கான செலவைக் குறைத்தல் மற்றும் சிறு, குறு மற்றும் நடுத்தர ஏற்றுமதியாளர்கள் எதிர்கொள்ளும் நிதி கட்டுப்பாடுகளை எளிதாக்கும் நோக்கத்துடன், ஏற்றுமதிக்கு முந்தைய மற்றும் பிந்தைய ஏற்றுமதிக் கடனுக்காக 2.75 சதவீதஅடிப்படைவட்டிமானியம்அறிவிக்கப்பட்டுள்ளது.

சிறு, குறு மற்றும் நடுத்தர ஏற்றுமதியாளர் ஒருவருக்கு ஒரு நிதியாண்டில் ரூ.50 லட்சம் அதிகபட்ச வட்டி மானியம் கிடைக்கும். இந்த திட்டத்துக்கான விரிவான செயல்பாட்டு வழிகாட்டுதல்கள் அனைத்து வங்கிகளுக்கும் இந்திய ரிசர்வ் வங்கியால் வழங்கப்பட உள்ளது. என மத்திய அரசு அறிவித்துள்ளது. இந்த அறிவிப்பை திருப்பூர் ஏற்றுமதியாளர்கள் சங்கம் வரவேற்றுள்ளது.

இதுகுறித்து சங்கத்தின் தலைவர் கே.எம். சுப்பிரமணியன் கூறியதாவது: அமெரிக்காவின் கூடுதல் வரி விதிப்பின்தாக்கத்தால் ஏற்றுமதியாளர்கள்தற்போது கடுமையான பணப்புழக்க சவால்களை எதிர்கொள்கின்றனர். இந்த சரியான நேரத்தில் சிறு, குறு மற்றும் நடுத்தர ஏற்றுமதியாளர்களுக்கு மிகவும் தேவையான நிதி ஆதரவை இந்த வட்டி மானியம் வழங்கும்.

குறிப்பாக தொழில் ஒரு சவாலான கட்டத்தில் செல்லும் இந்த நேரத்தில் மத்திய அரசின் அறிவிப்பு ஏற்றுமதியாளர்களுக்கு புத்தாண்டுக்கான வலுவான தொடக்கமாக அமைந்ததுள்ளது. இந்த ஆண்டு மிகவும் சாதகமானதாகவும், மேம்பட்ட ஏற்றுமதி வளர்ச்சியைக் காணும் என்றும் நம்புகிறோம். இவ்வாறு அவர் கூறினார்.

# ரெயில்வே பணிமனையில் இருந்து வந்த போது தடம் புரண்ட முத்துநகர் எக்ஸ்பிரஸ்




சென்னை, ஜன.7

சென்னை சேத்துப்பட்டில் உள்ள ரெயில்வே பணிமனையில் இருந்து நேற்று மாலை முத்துநகர் எக்ஸ்பிரஸ் ரெயில் எழும்பூர் ரெயில்நிலையம் நோக்கி வந்து கொண்டிருந்தது. அப்போது, அந்த ரெயில் திடீரென தடம் புரண்டது.

இதைத்தொடர்ந்து, உடனடியாக ரெயில் நிறுத்தப்பட்டது.


ரெயில்வே ஊழியர்கள் மற்றும் தொழில்நுட்ப குழுவினர் உடனடியாக சம்பவ இடத்திற்கு விரைந்து சென்று சீரமைக்கும் பணியில் ஈடுபட்டனர். தடம் புரண்ட பெட்டிகள் சிறிது நேரத்திலேயே சரி செய்யப்பட்டு, பாதுகாப்பாக மீண்டும் தண்டவாளத்தில் நிலைநிறுத்தப்பட்டன. இதையடுத்து, அந்த ரெயில் எழும்பூர் ரெயில் நிலையத்திற்கு சென்றது. தடம் புரண்டதற்கான காரணம் குறித்து ரெயில்வே அதிகாரிகள் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

# பிரசாதம் அனுப்புவதாக பணம் பறிக்கும் கும்பல் திருச்செந்தூர் கோவில் நிர்வாகம் போலீசில் புகார்

திருச்செந்தூர், ஜன.7

திருச்செந்தூர் கோவில் நிர்வாகம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:

திருச்செந்தூர் சுப்பிரமணிய சுவாமி கோவில் பெயர் மற்றும் அடையாளத்தை நிர்வாகத்தின் அனுமதியின்றி பயன்படுத்தி, இன்ஸ்ட்ராகிராம், யூடியூப், முகநூல் உள்ளிட்ட சமூக ஊடகங்கள் வாயிலாக தவறான மற்றும் பொய்யான தகவல்களைப் பரப்பி பக்தர்கள் மற்றும் பொதுமக்களை தவறாக வழிநடத்தும் நபர்கள் மீது கோவில் நிர்வாகத்தால் அவ்வப்போது போலீசில் புகார் அளிக்கப்பட்டு வருகிறது. அதனடிப்படையில் அந்த சமூக ஊடகப் பக்கங்களை முடக்குவதற்கும், அவற்றை நிர்வகிக்கும் நபர்களை அடையாளம் கண்டு, சட்டப்படி உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளவும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.



நேற்று முன்தினம் சமூக ஊடகப் பக்கத்தில் கோவிலின் அங்கீகரிக்கப்பட்ட நடைமுறைகள் மற்றும் விதிமுறைகளுக்கு முற்றிலும்முரணாக முருகனுக்கு அபிஷேகம் செய்யப்பட்டதாக கூறப்படும் பன்னீர் விபூதி, சந்தன காப்பு பிரசாதம், குங்குமம், திருநீறு, கயிறுகள் உள்ளிட்ட பொருட்கள் பக்தர்களின் வீடுகளுக்கு நேரடியாக அனுப்பப்படும் என பொய்யான தகவல்களை வெளியிட்டுள்ளனர். மேலும்,கோவில்பெயரை தவறாக பயன்படுத்தி பக்தர்கள் மற்றும் பொதுமக்கள் மத்தியில் குழப்பத்தை ஏற்படுத்தும் நோக்கத்துடன் மோசடியாக பணம் பறிக்கும் நோக்கில் காணொளிகள் வெளியிடப்பட்டுள்ளதாக தெரியவந்துள்ளது.

அந்த சமூக ஊடகப் பக்கத்தை உடனடியாக முடக்கவும், வெளியிடப்பட்ட காணொளிகளை நீக்கவும், இந்த மோசடி செயல்களில் ஈடுபட்ட நபர்களை அடையாளம் கண்டு, அவர்கள் மீது சட்டப்படி நடவடிக்கை மேற்கொள்ளவும் கோவில்நிர்வாகம் சார்பில் போலீசில் புகார் அளிக்கப்பட்டுள்ளது. எனவே, பக்தர்கள் மற்றும் பொதுமக்கள் கோவிலின் ஆன்லைன் சேவைகள், தரிசன முன்பதிவு, நன்கொடைகள் உள்ளிட்ட அதிகாரப்பூர்வ தகவல்களைப் பெற https//tiruchendurmurugan.hrcetngov.in என்ற அதிகாரப்பூர்வஇணையதளத்தை மட்டுமே பயன்படுத்துமாறும், சமூக ஊடகங்களில் பரவும் கோவில் நிர்வாகத்தால் அங்கீகரிக்கப்படாத, தவறான மற்றும் உண்மைதன்மையற்ற தகவல்களை நம்பி ஏமாற வேண்டாம். இவ்வாறு அதில் கூறப்பட்டு உள்ளது

# வங்கக்கடலில் உருவானது குறைந்த காற்றழுத்த தாழ்வு பகுதி

சென்னை, ஜன.7

மாலத்தீவு மற்றும் அதனை ஒட்டிய லட்சத்தீவு பகுதிகளின் மேல் ஒரு வளிமண்டல கீழடுக்கு சுழற்சி நிலவுகிறது என்றும், பூமத்திய ரேகையை ஒட்டிய தெற்கு வங்கக்கடலின் மத்திய பகுதிகளின் மேல் ஒரு வளிமண்டல மேலடுக்கு சுழற்சி நிலவுகிறது என்றும் சென்னை வானிலை மையம் தெரிவித்திருந்தது.

இதன்காரணமாகஇன்று ( 06012026) தமிழகம், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளில் வறண்ட வானிலை நிலவக்கூடும் என்றும், அதிகாலை வேளையில் ஓரிரு இடங்களில் லேசானபனிமூட்டம் காணப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில் வங்கக்கடலில் குறைந்த காற்றழுத்த தாழ்வு பகுதி உருவானதாக இந்திய வானிலை ஆய்வு மையம் அறிவித்துள்ளது. இது அடுத்த 24 மணி நேரத்தில் ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு பகுதியாக வலுப்பெறக் கூடும் என்றும் தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முன்னதாக சென்னை வானிலை மையம் வெளியிட்டிருந்த செய்திக்குறிப்பில் கூறப்பட்டிருந்ததாவது:

சென்னை மற்றும் புறநகர் பகுதிகளுக்கான வானிலை முன்னறிவிப்பு:

இன்று (06012026): வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும். அதிகாலை வேளையில் ஓரிரு இடங்களில் லேசான பனிமூட்டம் காணப்படும். அதிகபட்ச வெப்பநிலை 2930 செல்சியசை ஒட்டியும், குறைந்தபட்ச வெப்பநிலை 2122° செல்சியசை ஒட்டியும் இருக்கக்கூடும்.

மீனவர்களுக்கான எச்சரிக்கை:

தமிழக கடலோரப்பகுதிகள்:

06012026 முதல் 0801 2026 வரை: தென்தமிழக கடலோரப்பகுதிகள், மன்னார் வளைகுடா மற்றும் குமரிக்கடல் பகுதிகளில் சூறாவளிக்காற்றுமணிக்கு 35 முதல் 45 கிலோ மீட்டர் வேகத்திலும் இடையிடையே 55 கிலோ மீட்டர் வேகத்திலும் வீசக்கூடும்.

வங்கக்கடல் பகுதிகள்:

06012026 முதல் 0901 2026 வரை: தென்மேற்கு மற்றும் அதனை ஒட்டிய தென்கிழக்கு வங்கக்கடல் பகுதிகளில் சூறாவளிக்காற்றுமணிக்கு 35 முதல் 45 கிலோ மீட்டர் வேகத்திலும் இடையிடையே 55 கிலோ மீட்டர் வேகத்திலும் வீசக்கூடும்.

மேற்குறிப்பிட்ட நாட்களில் மீனவர்கள் இப்பகுதிகளுக்கு செல்ல வேண்டாமென்று அறிவுறுத்தப்படுகிறார்கள்.

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

# மாநில கல்விக் கொள்கை அடிப்படையில் பாடத்திட்டங்கள்: 25ந்தேதிக்குள் கருத்து தெரிவிக்கலாம் பள்ளிக்கல்வித்துறை

சென்னை, ஜன.7

தமிழக அரசின் பள்ளிக் கல்வித்துறை சார்பில் வெளியிடப்பட்டுள்ள செய்திக் குறிப்பில் கூறப்பட்டிருப்பதாவது:

"பள்ளிக்கல்விக்கான தமிழ்நாடு மாநிலக் கல்விக் கொள்கை 2025ன் அடிப்படையில் புதிய கலைத்திட்டம் மற்றும் பாடத்திட்டங்களை உருவாக்க பள்ளிக் கல்வித் துறை அமைச்சரின் தலைமையில் உயர்மட்ட வல்லுநர் குழு மற்றும் கலைத்திட்ட வடிவமைப்புக் குழுக்கள் அமைக்கப்பட்டன.

இக்குழுவினரின் வழிகாட்டுதலின்படி, மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனத்தால் ஒன்று முதல் ஐந்து வகுப்புகளின் தமிழ், ஆங்கிலம், கணக்கு, அறிவியல், சூழ்நிலையியல், சமூக அறிவியல் பாடங்களுக்கான பாடத்திட்டங்கள் உருவாக்கப்பட்டுள்ளன.



இப்பாடத்திட்டங்களைக் கல்வியாளர்கள், பொதுமக்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் ஆகியோர் https://tnschools.gov.in என்ற இணையத்தளத்தில் 6ந்தேதி (இன்று) முதல் பார்க்கலாம். மேலும் பாடத்திட்டம் சார்ந்து கருத்துகளை https://tnschools.gov.in என்ற இணையத்தளத்தில் கொடுக்கப்பட்டுள்ள இணையவழிப்படிவம் வாயிலாக, சுய விவரங்களுடன் வருகிற 25ந்தேதிக்குள் அனுப்ப வேண்டும்."

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# தனியார் இணையதளங்கள் மூலம் பஞ்சாமிர்தம் விற்கப்படுவதில்லை பழனி கோவில் நிர்வாகம் அறிவிப்பு

திண்டுக்கல் ஜன.7

திண்டுக்கல் மாவட்டம் பழனி முருகன் கோவிலுக்கு சாமி தரிசனம் செய்ய தினமும் ஏராளமான பக்தர்கள் வருகின்றனர். அவ்வாறு வரும் பக்தர்கள் தரிசனம் முடிந்த பின்பு கோவில் சார்பில் விற்கப்படும் பஞ்சாமிர்தத்தை வாங்கி செல்கின்றனர். பக்தர்களின் வசதிக்காக கோவில் நிர்வாகம் சார்பில் மலைக்கோவில் வெளிப்பிரகாரம், அடிவாரம், பழனி பேருந்து நிலையம் ஆகிய இடங்களில் பஞ்சாமிர்த விற்பனை நிலையங்கள் உள்ளன.



மேலும் கோவில் இணையதளத்தில் பதிவு செய்பவர்களுக்கு தபால் வழியாக பஞ்சாமிர்தம் அனுப்பி வைக்கப்படுகிறது. இந்த நிலையில் ஆன்லைன் வர்த்தக இணையதளத்தில் பழனி கோவில் பஞ்சாமிர்தம் அதிக விலைக்கு விற்பதாக புகார் எழுந்தது. அதைத்தொடர்ந்து தற்போது கோவில் நிர்வாகம் சார்பில், அறிவிப்பு ஒன்று வெளியிடப்பட்டு உள்ளது.

அதில், தனியார் இணையதளங்கள் வாயிலாக பஞ்சாமிர்தம் விற்கப்படுவதில்லை.

எனவே கூடுதல் தொகை கொடுத்து ஏமாற வேண்டாம். கோவில் விற்பனைநிலையத்தில் நேரடியாக பக்தர்கள் வாங்கி செல்லலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

# அரசு பஸ்சில் மாணவிக்கு பாலியல் தொல்லை: வாலிபர் கைது

கோவை, ஜன.7

கோவை மாவட்டம் வால்பாறை அருகே உள்ள கிராமத்தில் 17 வயது சிறுமி தனது பெற்றோருடன்வசித்து ஒரு பள்ளிக்கூடத்தில் 12ம் வகுப்பு படித்து வருகிறார். நேற்று முன்தினம் மாணவி பள்ளிக்கூடத்தில் செயல்முறை பயிற்சிக்கு தேவையான பொருட்களை வால்பாறையில் உள்ள கடைக்கு வந்து வாங்கிவிட்டு, வீட்டுக்கு செல்ல அரசு பஸ்சில் ஏறி சென்றார்.

அப்போது அதே பஸ்சில், வால்பாறையில் பேக்கரியில் வேலை பார்க்கும் சோலையாறு 3வது டிவிசனை சேர்ந்த சந்தோஷ்(வயது 22) என்பவர் பயணித்தார். தொடர்ந்து அவர், மாணவிக்கு பாலியல் தொல்லை கொடுத்துள்ளார். இதையடுத்து மாணவி கல்லாறு பிரிவு பகுதியில் வைத்து பஸ்சில் இருந்து கீழே இறங்கினார்.

அப்போது சந்தோசம் பஸ்சில் இருந்து இறங்கி பின்தொடர்ந்து மாணவி மீது கல் வீசியுள்ளார். இதில் மாணவி காயமடைந்து சத்தம்போடவே, அங்கிருந்தவர்கள் ஓடிவந்தனர். இதையடுத்து சந்தோஷ் தப்பியோடிவிட்டார். தொடர்ந்து காயமடைந்த மாணவி வால்பாறை அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டார். இதுகுறித்த மாணவி தரப்பில் அளித்த புகாரின்பேரில் வால்பாறை போலீஸ் இன்ஸ்பெக்டர் ராமச்சந்திரன் விசாரணை நடத்தினார்.

இதையடுத்து வால்பாறை அனைத்து மகளிர் போலீசார், சந்தோசை கைது செய்து போக்சோ சட்டத்தில் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர். இந்த சம்பவம் அப்பகுதியில் பரபரப்பை ஏற்படுத்தியது.

# 'அரசு ஊழியர்கள் தி.மு.க.வின் சூழ்ச்சிக்கு இரையாகி விடாமல் விழிப்புடன் இருக்க வேண்டும்' சசிகலா



சென்னை, ஜன.7

அரசு ஊழியர்கள் தி.மு.க.வின் சூழ்ச்சிக்கு இரையாகி விடாமல் விழிப்புடன்இருக்க வேண்டும் என சசிகலா தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:

"தமிழ்நாட்டில் அரசு ஊழியர்கள், ஆசிரியர்களுக்கு பழைய ஓய்வூதிய திட்டத்தை நிறைவேற்றுவதாக வாக்குறுதி அளித்த தி.மு.க. தலைமையிலான அரசு தற்போது புதிதாக ஒரு ஓய்வூதிய திட்டத்தை அறிவித்து இருப்பது தமிழக மக்களை வழக்கமாக ஏமாற்றுகின்ற மற்றொரு நாடகமாகத்தான் பார்க்க முடிகிறது. தி.மு.க. தலைமையிலான அரசின் பித்தலாட்டத்தை அரசு ஊழியர்கள் நன்றாக புரிந்து கொள்ளவேண்டும். எனவே, தி.மு.க.வினர், அரசு ஊழியர்களை ஏமாற்றுவதை விட்டு விட்டு அவர்களுக்கு உண்மையாக இருங்கள். அவர்களின் நலனில் அக்கறை செலுத்தக்கூடிய திட்டங்களை கொண்டு வாருங்கள்.

அரசு ஊழியர்களுக்கு நலன் பயக்கக்கூடிய ஆட்சி என்றால் ஜெயலலிதா ஆட்சியாகத்தான் இருக்கமுடியும். அரசு ஊழியர்கள் தி.மு.க.வினரின் சூழ்ச்சிக்கு இரையாகிவிடாமல் விழிப்புடன் இருந்து, வரும் தேர்தலில் ஆட்சிமாற்றத்திற்கு உறுதுணையாக இருக்க வேண்டும்."இவ்வாறு அவர்கூறியுள்ளார்.

# பிராட்வே பேருந்து நிலையம் தொடர்ந்து செயல்படும் என அறிவிப்பு

சென்னை, ஜன.7

பிராட்வே பேருந்து நிலையம் தொடர்ந்து செயல்படும் எனவும், நிர்வாக காரணங்களால் பேருந்து நிலைய மாற்றம் தற்காலிகமாக தள்ளி வைக்கப்படுவதாகவும் சென்னை மாநகர போக்குவரத்துக்கழகம் அறிவித்துள்ளது. இது தொடர்பாக மாநகர போக்குவரத்துக்கழகத்தின் 'எக்ஸ்' வலைதள பக்கத்தில் வெளியிடப்பட்டுள்ள பதிவில் கூறப்பட்டுள்ளதாவது;

"பிராட்வே பேருந்து நிலையத்தில் இருந்து இயக்கப்பட்டு வரும் பேருந்துகள் 07.01.2026 முதல் தீவுத்திடல் மற்றும் ராயபுரம் தற்காலிகபேருந்து நிலையங்களில் இருந்து இயக்கப்படும் என ஏற்கனவே அறிவிக்கப்பட்டது. நிர்வாக காரணங்களால் இந்த பேருந்து நிலையம் மாற்றம் தற்காலிகமாக தள்ளி வைக்கப்படுகிறது. மாற்றுத் தேதி பின்னர் அறிவிக்கப்படும். பிராட்வே பேருந்து நிலையம் தொடர்ந்து செயல்படும் என தெரிவித்துக் கொள்ளப்படுகிறது."



இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# பொன்முடி எம்.எல்.ஏ. மீதான செம்மண் குவாரி வழக்கு விசாரணை 19ந் தேதிக்கு தள்ளிவைப்பு



விழுப்புரம், ஜன.7

விழுப்புரம் மாவட்டம் வானூர் தாலுகா பூத்துறை கிராமத்தில் உள்ள செம்மண்குவாரியில் அளவுக்கு அதிகமாக அதாவது அனுமதியை மீறி 2 லட்சத்து 64 ஆயிரத்து 644 லோடு லாரிகளில் செம்மண் எடுத்ததன் மூலமாக அரசுக்கு 28 கோடியே 36 லட்சத்து 40 ஆயிரத்து 600 ரூபாய் இழப்பை ஏற்படுத்தியுள்ளதாக முன்னாள் அமைச்சர்பொன்முடிஎம்.எல்.ஏ., அவரது மகன் பொன்.கவுதமசிகாமணி, ஜெயச்சந்திரன், ராஜமகேந்திரன், சதானந்தம், கோதகுமார், கோபிநாதன், லோகநாதன் ஆகிய 8 பேர் மீது கடந்த 2012ம் ஆண்டில் மாவட்ட குற்றப்பிரிவு போலீசார் வழக்குப்பதிவு செய்தனர்.

இவ்வழக்கு விசாரணை, விழுப்புரம் மாவட்ட முதன்மை அமர்வு நீதிமன்றத்தில் நடந்து வருகிறது. இவ்வழக்கில் குற்றம் சாட்டப்பட்ட லோகநாதன் ஏற்கனவே உடல்நலக்குறைவால் இறந்துவிட்டார். இவ்வழக்கில் அரசு தரப்பு சாட்சிகளின் விசாரணை கடந்த அக்டோபர் மாதம் முடிவடைந்தது. 57 சாட்சிகளில் 30 பேர் அரசு தரப்புக்கு பாதகமாக பிறழ் சாட்சியம் அளித்துள்ளனர். இந்நிலையில் நேற்று இவ்வழக்கு விசாரணைக்கு வந்தது. அப்போது சதானந்தம், கோதகுமார், கோபிநாதன் ஆகிய 3 பேர் மட்டும் நேரில் ஆஜராகினர். பொன்முடி எம்.எல்.ஏ., பொன்.கவுதமசிகாமணி, ஜெயச்சந்திரன், ராஜமகேந்திரன் ஆகிய 4 பேரும் ஆஜராகவில்லை.

மேலும் இவ்வழக்கில் குற்றம் சாட்டப்பட்டவர்கள், தங்கள் தரப்பில் 9 சாட்சிகளிடம் விசாரணை செய்ய அனுமதி கேட்டு அவர்களது பெயர் பட்டியலுடன் ஏற்கனவே மனு தாக்கல் செய்திருந்தனர். அதன்படி நேற்று தங்கள் தரப்பில் விழுப்புரம் கோட்டாட்சியரின் நேர்முக உதவியாளராக பணியாற்றி வரும் வசந்தகிருஷ்ணன் (தாசில்தார் நிலை) ஆஜரானார்.

அவரிடம் இவ்வழக்கு தொடர்பாக பொன்.கவுதமசிகாமணி, ஜெயச்சந்திரன், ராஜமகேந்திரன் ஆகியோர் தரப்பு வக்கீல்கள் விசாரணை நடத்தினர். இந்த விசாரணை முடிந்ததும் அரசு தரப்பு வக்கீல் கார்த்திகேயன் குறுக்கு விசாரணை செய்தார். இதன் விவரத்தை மாவட்ட நீதிபதி மணிமொழி பதிவு செய்தார். தொடர்ந்து, குற்றம் சாட்டப்பட்டவர்கள் தரப்பில் மற்ற சாட்சிகளை விசாரிப்பதற்காக இவ்வழக்கின் விசாரணையை வருகிற 19ந் தேதிக்கு தள்ளி வைத்து மாவட்ட நீதிபதி மணிமொழி உத்தரவிட்டார்.

# 'நேரடி நெல் கொள்முதல் நிலையங்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்படவில்லை' சவுமியா அன்புமணி

சென்னை, ஜன.7

பசுமை தாயகம் அமைப்பின் தலைவர் சவுமியா அன்புமணி கும்பகோணத்தில் நடந்த சிங்க பெண்ணே நிகழ்ச்சியில் கலந்து கொண்டார். அவரை திரளான பெண்கள் ஆரத்தி எடுத்து வரவேற்றனர். அவர்களுடன் சவுமியா அன்புமணி கலந்துரையாடினார். பின்னர் அவர்கள் மத்தியில் சவுமியா அன்புமணி பேசியதாவது:

"கும்பகோணம் அரசு ஆஸ்பத்திரியில் அடிப்படை கட்டமைப்புகள் முறையாக இல்லை. எம். ஆர். ஐ. ஸ்கேன் வசதி இல்லை. போதிய டாக்டர்கள் இல்லை. நர்சுகள் இல்லை. எனவே கும்பகோணத்தை மாவட்ட தலைநகராக தரம் உயர்த்தி மருத்துவக் கல்லூரியை அமைக்க வேண்டும்.

டாஸ்மாக் கடைகளுக்கு கொடுக்கப்படும் முக்கியத்துவம் நேரடி நெல் கொள்முதல் நிலையங்களுக்கு கொடுக்கப்படவில்லை. நேரடி நெல் கொள்முதல் நிலையங்களில் தேவையான கிடங்கு வசதிகள் செய்ய வேண்டும். மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பயிர்களுக்கு உரிய இழப்பீட்டை அரசு வழங்கவில்லை."

இவ்வாறு அவர் பேசினார்.



# சென்னையில் சட்டவிரோத கட்டிடங்களை அதிகாரிகள் கண்காணிப்பது இல்லை: ஐகோர்ட்டு கருத்து

சென்னை, ஜன.7

சென்னை ஜார்ஜ் டவுண் அய்யா முதலித் தெருவில் பிரமிளா என்பவர் வீடு கட்ட முடியாத வகையில், அவர் இடத்துக்கு செல்லும் சாலையை பலர் ஆக்கிரமித்து உள்ளனர். இதுகுறித்து அவர் தொடர்ந்த வழக்கை விசாரித்த ஐகோர்ட்டு, ஆக்கிரமிப்புகளை அகற்றும்படி உத்தரவிட்டும் அகற்றப்படவில்லை. இதையடுத்து அவர் கோர்ட்டு அவமதிப்பு வழக்கை தாக்கல் செய்தார்.

இந்த வழக்கை விசாரித்தஐகோர்ட்டுநீதிபதிகள் எஸ்.எம். சுப்பிரமணியம், சி.குமரப்பன் ஆகியோர், ஆக்கிரமிப்புகளை அகற்றும் பணியில் மாநகராட்சி அதிகாரிகளும், போலீஸ் அதிகாரிகளும் ஒருங்கிணைந்து செயல்படவில்லை. எனவே, இந்த வழக்கில் நகராட்சி நிர்வாகத்துறை செயலாளர், டி.ஜி.பி. ஆகியோரை எதிர்மனுதாரர்களாக தாமாக சேர்க்கிறோம். ஆக்கிரமிப்புகளை அகற்ற ஒத்துழைக்காத அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும்" என்று உத்தரவிட்டனர்.




இந்நிலையில், இந்த வழக்கு நீதிபதிகள் முன்பு மீண்டும் விசாரணைக்கு வந்தது. அப்போது, மனுதாரர் தரப்பில் ஆஜரான வக்கீல் விஜயன் சுப்பிரமணியன், "ஆக்கிரமிப்புகளை அதிகாரிகள் அகற்றிவிட்டனர்" என்றார். அரசு தரப்பில், இன்ஸ்பெக்டர் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றார்.

இதை பதிவு செய்து கொண்ட நீதிபதிகள், "சென்னையில் விதிமுறைகளை மீறி கட்டப்படும் கட்டிடங்களை மாநகராட்சி அதிகாரிகள் முறையாக கண்காணித்து நடவடிக்கை எடுப்பதில்லை. தொடர்ந்து கண்காணித்தால் மட்டுமே சட்டவிரோத கட்டுமானங்களை தடுக்க முடியும்" என்று கூறி, வழக்கை முடித்து வைத்தனர்.

# 'தமிழ்நாடு கல்வியில் அடுத்த பரிணாமத்தை அடைவதற்கு மடிக்கணினி வழிவகுக்கும்' மயில்சாமி அண்ணாதுரை

சென்னை, ஜன.7

'உலகம்உங்கள்கையில்' நிகழ்ச்சியில் 'இஸ்ரோ' முன்னாள் இயக்குனர் விஞ்ஞானி மயில்சாமி அண்ணாதுரை பேசியதாவது:

"மாணவமாணவிகளாகிய நீங்கள் இப்போது வாங்கும் மடிக்கணினி, உங்களில் ஒளிந்திருக்கும் கல்வியாளர், தொழில் பொறியாளர், கவிஞர், ஆசிரியர், ஆராய்ச்சியாளர், ஆட்சியாளர்எனஇன்னும்பிறரையும்வளர்த்தெடுக்கும். சாதி, மதம், செல்வம் எதுவும் கல்விக்கு தடையில்லை என்று தமிழ்நாடு நமக்கு கொடுத்த கல்வியினால் அதை சொல்ல முடிகிறது. நித்தம் கல்வி என்ற டிஜிட்டல் உலகுக்கு இனிதடையில்லை என்பதை மெய்ப்படுத்ததான், உலகம் உங்கள் கையில் திட்டம். இது புது விடியல். 20 லட்சம் மடிக்கணினிகள், அதனுடன் செயற்கை நுண்ணறிவுகள் மாணவமாணவிகள் கையில் சேரும் போது, அது சாதனமாக அல்லாமல், சாதிக்க வைக்கும் சக்தியாக இருக்கும்.



மடிக்கணினி ஒரு பிரபஞ்சம். ஒரு சொடக்கில் அனைத்தையும் பார்க்கவும், படிக்கவும் முடியும். தமிழ்நாடு கல்வியில் அடுத்த பரிணாமத்தை அடைவதற்கு இந்த மடிக்கணினி வழிவகுக்கும். இந்த திட்டம் சமத்துவத்தின் அடுத்த சின்னம். எதிர்காலத்தின் விதை. தமிழ்நாடு இந்தியாவில் தனித்துவம் மிக்கதாக இருக்கிறது."

இவ்வாறு அவர் தெரிவித்தார்.

# தஞ்சை மாவட்டத்திற்கு இன்று உள்ளூர் விடுமுறை

தஞ்சாவூர், ஜன.7

தஞ்சை மாவட்டம் திருவையாறு காவிரி கரையில் அமைந்துள்ள தியாகராஜர் சுவாமிகளின் சமாதி வளாகத்தில் ஆண்டுதோறும் ஆராதனை விழா நடைபெறுகிறது. அந்த வகையில் தியாகராஜர் சுவாமிகளின் 179வது ஆராதனை விழா கடந்த 3ந் தேதி தொடங்கியது.

விழா நாட்களில் தினமும் காலை 8 மணி முதல் இரவு 11 மணி வரை இசை நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன. முக்கிய நிகழ்வான ஆராதனை விழா வருகிற 7ம் தேதி நடைபெறுகிறது. இதையொட்டி 7ம் தேதி தஞ்சாவூர் மாவட்டம் முழுவதும் உள்ள அனைத்து அரசு அலுவலகங்கள் மற்றும் கல்வி நிறுவனங்களுக்கு உள்ளூர் விடுமுறை அளித்து மாவட்ட ஆட்சியர் திருமதி பிரியங்கா பங்கஜம் உத்தரவிட்டுள்ளார்.



இந்த விடுமுறையை ஈடுசெய்யும் வகையில் 24ம் தேதி (சனிக்கிழமை) தஞ்சாவூர் மாவட்டத்தில் உள்ள அனைத்து அரசு அலுவலகங்களுக்கும் கல்வி நிறுவனங்களுக்கும் பணி நாளாக அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த உள்ளூர் விடுமுறை செலவாணி முறிச்சட்டம் 1881இன் கீழ் வராது என்பதால் தஞ்சாவூர் மாவட்ட கருவூலம் மற்றும் தஞ்சாவூர் மாவட்டத்தில் உள்ள அனைத்து கிளை கருவூலங்களும் குறிப்பிட்ட பணியாளர்களுடன் இயங்கும் என மாவட்ட ஆட்சியர் பிரியங்கா பங்கஜம் தெரிவித்துள்ளார்.

# முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் இன்று திண்டுக்கல் செல்கிறார்

திண்டுக்கல், ஜன.7

திண்டுக்கல் மாவட்ட கலெக்டர்அலுவலகவளாகத்தில் நாளை (புதன்கிழமை) காலை, அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா நடைபெறுகிறது. இந்த விழாவில் முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் கலந்து கொண்டு பேசுகிறார். மேலும் பல்வேறு துறைகளின் சார்பில் 30 ஆயிரம் பேருக்கு நலத்திட்ட உதவிகளை முதல் அமைச்சர் வழங்குகிறார்.

அதோடு ஒரு லட்சத்து 2 ஆயிரம் பேருக்கு பட்டா வழங்குகிறார். மேலும் ரூ.1,500 கோடி மதிப்பிலான திட்டங்களை அவர் தொடங்கி வைக்கிறார். இதில் ரூ.75 கோடியில் கட்டப்பட்டுள்ள கூட்டுறவுகலைக்கல்லூரி, ரூ.15 கோடியில் கட்டப்பட்ட அரசு கலைக்கல்லூரி, குடிநீர் திட்டம் உள்ளிட்டவற்றை இடம்பெறுகின்றன. இது தவிர மாவட்டத்துக்கு புதிய திட்டங்களையும் முதல்அமைச்சர்அறிவிக்க இருக்கிறார்.

இந்த விழாவுக்காக கலெக்டர்அலுவலகவளாகத்தில் பிரமாண்ட பந்தல், மேடை அமைக்கும் பணி முழுவீச்சில் நடக்கிறது. அரசு விழாவில் பங்கேற்பதற்கு, முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் நாளை காலைமதுரையில்இருந்து கார் மூலம் திண்டுக்கல்லுக்கு வருகிறார். இதையொட்டி முதல் அமைச்சர் மு.க.ஸ்டாலினை வரவேற்க தி.மு.க. சார்பில் பிரமாண்ட ஏற்பாடு செய்யப்பட்டு இருக்கிறது.

அதன்படி திண்டுக்கல்மதுரைசாலையில் பாண்டியராஜபுரம், கொடைரோடு சுங்கச்சாவடி, பெருமாள் கோவில்பட்டி, சின்னாளப்பட்டி, தோமையார்புரம், கலெக்டர் அலுவலகம் அருகில் அஞ்சலி ரவுண்டானா ஆகிய 6 இடங்களில் வரவேற்பு அளிக்கப்படுகிறது. அப்போது முதல்அமைச்சர் தி.மு.க. வினர் மற்றும் பொதுமக்களின் வரவேற்பை ஏற்று கொள்ள இருக்கிறார்.

NAMADHU DHINA KANI DAILY MORNING NEWSPAPER
PRESS REGISTER GENERAL OF INDIA
PRGI NO TNTAM/2023/88253



# திருப்பூரில் குறளாசிரியர் மாநாடு ஆசிரியர்கள் அரசு அலுவலர்கள் கலந்து கொள்ள தமிழக அரசு அழைப்பு



சென்னை, ஜன.7

தமிழக அரசின் தமிழ் வளர்ச்சித் துறை சார்பில் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளதாவது;

“தமிழ்நாடு முதல் அமைச்சரால் 31.12.2024ம் நாளன்று கன்னியாகுமரி மாவட்டத்தில் நடைபெற்ற அய்யன் திருவள்ளுவர் சிலை நிறுவிய வெள்ளிவிழா நிகழ்ச்சியில் ஒவ்வொரு ஆண்டும் குறள் வாரம் கொண்டாடப்படும் என அறிவிக்கப்பட்டது. மேற்கண்ட அறிவிப்பினை செயல்படுத்திடும் பொருட்டு 2026 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் குறள்வார விழா கொண்டாடிட ஆணையிடப்பட்டுள்ளது.

அதன் அடிப்படையில், தமிழ் வளர்ச்சித் துறையின் சார்பில், திருப்பூர் மாவட்ட நிருவாக ஒருங்கிணைப்பில், மாநில அளவிலான திருக்குறள் வினாடி வினாப் போட்டி மற்றும் குறளாசிரியர் மாநாடு திருப்பூர் அரசு மருத்துவக் கல்லூரி கலையரங்கில் 21.01.2026 புதன் கிழமை நடைபெறவுள்ளது.

திருப்பூரில் நடைபெறவுள்ள குறளாசிரியர் மாநாடு மற்றும் மாநில அளவிலான குறள்வினாடி வினா நிகழ்ச்சிகளில் பங்கேற்பதற்கு சென்னை மாவட்ட நிருவாக ஒருங்கிணைப்பில் தமிழ் வளர்ச்சித்துறையுடன்இணைந்து மாவட்ட அளவிலான முதல்நிலைத் தேர்வு சென்னை சேத்துப்பட்டு ஆரிங்டன் சாலையில் உள்ள கிருத்துவக் கல்லூரி மேனிலைப் பள்ளியில் எதிர்வரும் ஜனவரி மாதம் 9 ஆம் நாள் வெள்ளிக்கிழமை அன்று பிற்பகல் 2 மணி முதல் 3 மணிவரை நடைபெற உள்ளது.

சென்னை மாவட்டத்தில் பணிபுரியும் அரசு மற்றும் அரசுசார் நிறுவன அலுவலர்கள்/பணியாளர்கள் (அனைத்து நிலைகளிலும்) மற்றும் ஆசிரியர்கள் (அனைத்து நிலைகளிலும்) முதல்நிலைத் தேர்வில் (கொள்குறி முறை) பங்குபெறும் வகையில், இதனுடன் இணைக்கப்பட்டுள்ள விரைவுத் துலங்கல் குறியீட்டின்மூலம் பதிவு செய்யப்பெறலாம்.

முன்பதிவு செய்யமுடியாத நேர்வில், போட்டி நடைபெறும் தேர்வு மையத்திற்கு அடையாள அட்டையுடன் நேரடியாகச் சென்று பங்கேற்கலாம். இந்த முதல்நிலைத் தேர்வுக்கு அனைவரும் பிற்பகல் 1 மணிக்கு முன்பாக தேர்வு மையத்திற்கு அடையாள அட்டையுடன் வருகைபுரிய வேண்டும்.

இத்தேர்வில் முதல் மதிப்பெண்களைப் பெறும் 30 நபர்கள் (ஆசிரியர்கள் 15 நபர் + அரசு அலுவலர்கள் 15 நபர்) திருப்பூர் மாவட்டத்தில் 21012026 புதன்கிழமையன்று அரசு மருத்துவக் கல்லூரி கலையரங்கத்தில் நடைபெறும் மாநில அளவிலான வினாடி வினா போட்டி மற்றும் குறளாசிரியர் மாநாட்டில் பங்கு பெறுவதற்கான வாய்ப்பினைப் பெறுவர்.

திருப்பூர் மாவட்ட நிகழ்ச்சிக்குத் தெரிவு செய்யப்பெறும் 30 நபர்களில் முதல் மதிப்பெண் அடிப்படையில் தெரிவு செய்யப்பெறும் 9 நபர்கள் 3 குழுவாகத் திருப்பூரில் நடைபெறும் வினாடி வினாப் போட்டியில் பங்குபெறுவர்.

வினாடி வினாவின் இறுதிப்போட்டியில் முதல் இடம் பெறும் அணிக்கு ரூ.1,50,000/ இரண்டாம் இடம் பெறும் அணிக்கு ரூ.1,20,000/ மூன்றாம் இடம்பெறும் அணிக்கு ரூ.90,000/ பரிசாக வழங்கப்படும். போட்டியில் பங்கு பெற்ற மீதமுள்ள 3 அணிகளுக்கு ஊக்க பரிசாக ரூ.15,000/ வழங்கப்படும்.

குறள் வினாடி வினாவுக்கான பாடத்திட்டங்கள் விதிமுறைகள் பற்றி அறியவும் போட்டியில் கலந்து கொள்ள பதிவு செய்வதற்கும் பின்வரும் விரைவுத்துலங்கள் குறியீடுகளைப் பயன்படுத்தவும்.”

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# திருவொற்றியூர் சூரை மீன்பிடி துறைமுகம் விவகாரம்: தமிழக அரசு விளக்கம்

சென்னை, ஜன.7

தமிழக அரசு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறப்பட்டிருப்பதாவது:

திருவொற்றியூர் குப்பம் சூரை மீன்பிடி துறைமுகம் பயன்பாட்டிற்குவராமல்முடங்கியுள்ளதாக05.01.2026 அன்று நாளிதழில் வெளியான செய்தி தவறானது மற்றும் உண்மைக்கு மாறானது ஆகும்.

சென்னை மாவட்டம், திருவொற்றியூர் குப்பம் சூரை மீன்பிடி துறைமுகம் ரூ.272.70 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டு, 28.05.2025 அன்று முதலமைச்சர் மு.க.ஸ்டாலினால் திறந்து வைக்கப்பட்டு மீனவ பொது மக்களின் பயன்பாட்டிற்கு வழங்கப்பட்டுள்ளது. Tamilnadu Marine Fishing Regulation Act & Rules அடிப்படையில் துறைமுக மேலாண்மை சங்கம் 13.06.2025 அன்று பதிவு செய்யப்பட்டு, மீன்பிடித்துறைமுகத்தினை பராமரித்திட ஏதுவாக சென்னை மாவட்ட ஆட்சியர் அவர்களை தலைவராகக் கொண்ட மாவட்ட அளவிலான ஆலோசனைக்குழுவும், சென்னை மண்டல மீன்வளம் மற்றும் மீனவர்நலத்துறை இணை இயக்குநர் தலைமையில் மேலாண்மைக் குழுவும் அமைக்கப்பட்டுள்ளது.

துறைமுகத்தில் மீனவர்களுக்கான தங்குமிடம், படகு தங்குதளம், படகு பழுதுபார்ப்பு வசதி உள்ளிட்ட சேவைகள் செயல்பாட்டில் உள்ளன. அருகாமையில் உள்ள ஐந்து கடற்கரை கிராமங்களைச் சேர்ந்த நாட்டுப் படகுகள் தடையின்றி தங்கியிருந்து மீன்பிடி நடவடிக்கைகள் மேற்கொண்டு வருகின்றன. வலை பின்னும் கூடம் 3874 சதுர அடி பரப்பளவில் கான்கிரீட் அமைப்பாக கட்டப்பட்டு முழு பயன்பாட்டில் உள்ளது.

பாரத் பெட்ரோலியம் கார்ப்பரேஷன் லிமிடெட் நிறுவனத்தின் அனுமதியுடன், தமிழ்நாடு மீனவளர்ச்சி கழகம் மூலம் டீசல் பங்க் அமைப்பதற்கான பூர்வாங்க பணிகள் தொடங்கப்பட்டுள்ளன. குளிர்சாதன சேமிப்பு (100 டன்) கிடங்கு மற்றும் பனிக்கட்டி நிலையம் (50 டன்) ஒப்பந்தப்புள்ளி இறுதி செய்யப்பட்டுள்ளது.

மேலும், சூரை மீன்பிடி துறைமுக வளாகத்தில் மீனவர்கள் மற்றும் மீனவ மகளிரின் திறன் மேம்பாட்டிற்காக தமிழ்நாடு திறன் மேம்பாட்டு கழகம் மூலம் மீன் மற்றும் இறால் பொருட்களுக்கு மதிப்பூட்டும் பயிற்சி, மீன் பொருட்களை பாதுகாப்பான முறையில் தயாரித்து விற்பனை செய்யும் பயிற்சி, கடலோர பாதுகாப்புப் படை / காவல் படை ஒருங்கிணைப்பு கூட்டங்கள், கடல் ஆமை பாதுகாப்பு விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் மற்றும் பெண்கள் மேம்பாடு தொடர்பான பயிற்சிகள் தொடர்ந்து நடத்தப்பட்டு வருகின்றன.

அழிவுப் பாதிப்பில் உள்ள கடல் உயிரினங்கள் பாதுகாப்பிற்காக வனத்துறை மூலம் Marine Elite Force 3 ரோந்து படகுகளைஇத்துறைமுகத்திலிருந்துஇயக்கிதொடர்ந்து கண்காணிப்பு பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. சுத்தம் மற்றும் பாதுகாப்பு காரணமாக வார இறுதிகளில் பொதுமக்கள் நுழைவு கட்டுப்படுத்தப்பட்டு, மீன்பிடி தொடர்புடைய செயல்பாடுகள் மட்டுமே அனுமதிக்கப்படுகின்றன. எனவே, துறைமுகம் செயல்பட்டு வருவதுடன், மூடப்பட்டுள்ளதாக வெளியான செய்தி தவறானதாகும். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# இன்றைய ராசி பலன்கள் (7.1.2026)

மேஷம்: வேலையில் புதிய பொறுப்புகள் வரும். பொறுமையுடன் செயல்பட்டால் முன்னேற்றம் கிடைக்கும். செலவுகளில் கவனம் தேவை.

ரிஷபம்: குடும்பத்தில் மகிழ்ச்சியான சூழல் நிலவும். பணவரவு திருப்தி தரும். நண்பர்களின் ஆதரவு கிடைக்கும்.

மிதுனம்: பேச்சுத் திறன் மூலம் சாதகமான முடிவுகள் கிடைக்கும். மாணவர்களுக்கு நல்ல நாள். தேவையற்ற விவாதங்களை தவிர்க்கவும்.

கடகம்: மனஅமைதி முக்கியம். வேலைகளில் சற்று தாமதம் ஏற்படலாம். ஆரோக்கியத்தில் கவனம் தேவை.

சிம்மம்: தன்னம்பிக்கை உயரும் நாள். மேலதிகாரிகளிடம் பாராட்டு கிடைக்கும். புதிய முயற்சிகள் வெற்றி தரும்.

கன்னி: பணவிஷயங்களில் திட்டமிட்டு நடக்க வேண்டும். குடும்ப உறுப்பினர்களுடன்நல்லபுரிதல் ஏற்படும்.

துலாம்: செய்யும் செயல்களில் வெற்றி கிடைக்கும். திருமணம் தொடர்பான விஷயங்களில் நல்ல செய்தி வரும்.

விருச்சிகம்: உழைப்புக்கு ஏற்ற பலன் கிடைக்கும்.மறைமுகஎதிரிகளை கவனிக்கவும். மன அழுத்தம் குறையும்.

தனுசு: பயணம்தொடர்பானவாய்ப்புகள் வரும். கல்வி, போட்டித் தேர்வுகளில் முன்னேற்றம் காணப்படும்.

மகரம்: வேலைப்பளு அதிகரிக்கும். பொறுப்புணர்ச்சியுடன் செயல்பட்டால் உயர்வு கிடைக்கும்.

கும்பம்: புதிய யோசனைகள் வெற்றி தரும். நண்பர்கள் மூலம் லாபம் கிடைக்கும். மகிழ்ச்சியான நாள்.

மீனம்: ஆன்மீக எண்ணங்கள் அதிகரிக்கும். குடும்ப ஆதரவு கிடைக்கும். செலவுகளை கட்டுப்படுத்தவும்.

# இளம்பெண் குளிப்பதை வீடியோ எடுத்த லாட்ஜ் ஊழியர் கைது



சென்னை ஜன.7

கேரள மாநிலத்தை சேர்ந்த இளம்பெண் ஒருவர் சென்னை சென்டிரல் பகுதியில் உள்ள பிரபல லாட்ஜ் ஒன்றில் சமீபத்தில் அறை எடுத்து தங்கினார். சென்னையை அடுத்த பெரியபாளையத்தில் உள்ள தனியார் மருத்துவமனையில் அவர் செவிலியராக பணிபுரிந்து வந்தார்.

இந்த நிலையில் அந்த லாட்ஜில் வேலை செய்து வந்த ஒடிசா மாநிலத்தைச் சேர்ந்த தனஞ்செய்பதி (19 வயது) என்ற ஊழியர், இளம்பெண் குளிக்கும்போது ஜன்னல் வழியாக வீடியோ எடுத்துள்ளார். இதை பார்த்து அதிர்ச்சியடைந்த அந்த பெண் உடனடியாக கூச்சல் போட்டார். பின்னர் ஆடைகளை அணிந்து கொண்டு வெளியில் வந்த அவர், தனஞ்செய்பதியின் செல்போனை பிடுங்கி ஆய்வு செய்துள்ளார்.

ஆனால் தனஞ்செய்பதி அதற்குள்ளாக அவர் குளிக்கும்போது எடுத்த வீடியோவை அகற்றிவிட்டதாக தெரிகிறது. இருந்தாலும் அவரது செல்போனில் வேறு சில பெண்கள் குளிக்கும்போது எடுத்த காட்சிகள் பதிவாகி இருந்தன. அதன் அடிப்படையில், வேப்பேரி அனைத்து மகளிர் போலீசில் தனஞ்செய்பதி மீது புகார் மனு கொடுக்கப்பட்டது. அதன் பேரில் போலீசார் வழக்குப்பதிவு செய்து தனஞ்செய்பதியை கைது செய்தனர்.

# 'டாக்ஸிக்' படத்தில் ருக்மணி வசந்த்.. கவனம் ஈர்க்கும் பர்ஸ்ட் லுக்




‘டாக்ஸிக்’ படத்தில் 'மெலிசா' என்ற கதாபாத்திரத்தில் ருக்மணி வசந்த் நடித்துள்ளார் .

நடிகர் யாஷ் தனது 19வது திரைப்படத்தில் தற்போது நடித்து வருகிறார். இப்படத்திற்கு ‘டாக்ஸிக்’ என்று பெயரிடப்பட்டுள்ளது. இப்படத்தை பிரபல நடிகை கீது மோகன் தாஸ் இயக்குகிறார். இதில் கியாரா அத்வானி, ஹுமா குரேஷி, நயன்தாரா, ருக்மிணி வசந்த் உட்பட பலர் நடிக்கின்றனர். கேவிஎன் புரோடக்சன்ஸ் தயாரிக்கும் இப்படம் வருகிற மார்ச் 19ம் தேதி வெளியாகும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

சமீபத்தில் இப்படத்திலிருந்து, கியாரா அத்வானி, நயன்தாரா மற்றும் ஹுமா குரேஷி ஆகியோரின் பர்ஸ்ட் லுக் போஸ்டர்கள் வெளியாகி இருந்தன. இந்நிலையில், நடிகை ருக்மணி வசந்தின் பர்ஸ்ட் லுக் போஸ்டர் தற்போது வெளியாகி இருக்கிறது. இது கவனத்தை ஈர்த்து வருகிறது.

# சின்ன சின்ன ஆசையில் தொடங்கிய பயணம்..34 ஆண்டுகளாக இசை உலகை ஆளும் இசைப்புயல்

இந்திய சினிமாவில் அசைக்க முடியாத இசையமைப்பாளராக விளங்கி வருபவர் இசைப்புயல் ஏ.ஆர். ரகுமான். இந்தியாமட்டுமின்றிகடல்கடந்தும்தனக்கெனஒருரசிகர்பட்டாளத்தைவைத்திருக்கும்இந்தியஇசையமைப்பாளராக ஏஆர்ரகுமான்திகழ்கிறார். மேற்கத்திய இசையை இந்தியர்கள் கேட்டு வந்ததை மாற்றி, தனது அசாத்திய திறமையால் இந்திய இசையை உலகம் முழுவதும் பரவச் செய்தவர் ஏ.ஆர். ரகுமான்.ரகுமான் ஜனவரி 6, 1966ஆம் ஆண்டு ஆர். கே. சேகர் – கரீமா தம்பதியினருக்கு மகனாகப் பிறந்தார். ரகுமானின் தந்தையும் இசையமைப்பாளர்தான். ஆனால் எதிர்பாராத விதமாக ரகுமான் ஒன்பது வயதிலேயே தந்தையை இழந்தார். ரகுமானின் இயற்பெயர் “திலீப் குமார்”. பின்னர் ஏற்பட்ட மனமாற்றம் காரணமாக இஸ்லாம் மதத்திற்கு மாறினார்.

தந்தையை இழந்த ரகுமான், தனது தந்தையின் இசை வாத்தியங்களை மற்றவர்களுக்கு வாடகைக்கு கொடுத்து சிறு வருமானம் ஈட்டினார். இதன் மூலமாக சிறுவயதிலேயே இசை சார்ந்த துறையில் நுழைந்தார்.இசையின் மீது ஏற்பட்ட அதீத ஆர்வத்தால் தன்ராஜ் மாஸ்டரிடம் இசை கற்க சேர்ந்தார். இளையராஜா, எம்.எஸ். விஸ்வநாதன், குன்னக்குடி வைத்தியநாதன் போன்றோரின் குழுக்களில் இடம்பெற்று அவர்களுடன் பணியாற்றினார். இதற்கிடையில் புதிது புதிதாக இசையை வடிவமைத்து, தனக்குத் தானே பயிற்சியும் பெற்று வந்தார். அவ்வாறு அமைத்த இசையை நண்பர்களுக்கு இசைத்து காண்பிப்பார்.


1992ஆம் ஆண்டு மணிரத்தினம் இயக்கத்தில் தனது முதல் படமான ‘ரோஜா’விற்கு இசையமைத்தார். சின்ன சின்ன ஆசை, புது வெள்ளை மழை இங்கு பொழிகின்றது ஆகிய பாடல்கள் பட்டி தொட்டியெல்லாம் பிரபலமானது. இன்றும் கூட பலரது செல்போன்களில் புது வெள்ளை மழை பாடலின் கரோக்கி இசை ரிங்டோனாக ஒலிப்பதை கேட்க முடிகிறது.‘ரோஜா’ படத்திற்குப் பிறகு ஏ.ஆர் ரகுமானுக்கு தொடர்ச்சியாக படங்கள் குவிந்தன. முதல் படத்திலேயே தேசிய விருதையும் பெற்றார் ரகுமான். மிகக் குறுகிய காலத்திலேயே தேசிய விருது, தமிழ்நாடு மாநில திரைப்பட விருது உள்ளிட்ட மொத்தம் 170க்கும் மேற்பட்ட விருதுகளை வென்றுள்ளார்.

2008ஆம் ஆண்டு வெளியான ‘ஸ்லம்டாக் மில்லியனர்’ திரைப்படம் அவருக்கு ஆஸ்கர் விருதை பெற்றுத் தந்தது. மேலும், இந்தப் படத்தின் ஜெய் ஹோ பாடல் சிறந்த பாடலாக தேர்வு செய்யப்பட்டு இன்னொரு ஆஸ்கர் விருதும் வழங்கப்பட்டது. இரண்டு ஆஸ்கர் விருதுகளை வென்ற முதல் இந்தியர் ஏஆர்ரகுமான் என்பது குறிப்பிடத்தக்கது. ஆஸ்கர் விருதை தனது இரு கைகளாலும் உயர்த்திப் பிடித்து, “எல்லாப் புகழும் இறைவனுக்கே” என்று அவர் கூறினார். இசை உலகில் தனி சாம்ராஜ்யமே நடத்திக்கொண்டு இருக்கும் ஏ.ஆர். ரகுமான், இன்னும் பல விருதுகளை வென்று இசை வெள்ளத்தில் ரசிகர்களை தொடர்ந்து மெய்மறக்க வைக்கிறார். அவரது பிறந்த நாளான இன்று, அவரை வாழ்த்துவோம்.

# 'ஜனநாயகன்' படம் வெளியாவதில் சிக்கல்.. தணிக்கை சான்றிதழ் கிடைக்காததால் ரசிகர்கள் அதிருப்தி!

"சதுரங்க வேட்டை, தீரன் அதிகாரம் ஒன்று, நேர்கொண்ட பார்வை" போன்ற வெற்றிப் படங்களை இயக்கியவர் இயக்குநர் எச்.வினோத். தற்போது இவர் யை வைத்து ‘ஜனநாயகன்’ படத்தை இயக்கி உள்ளார். இப்படத்தின் எடிட்டிங் பணிகள் வரை முடிவடைந்து பொங்கல் வெளியீடாக வரும் 9ம் தேதி திரைக்கு வர உள்ளது. இதில், நாயகியாக பூஜா ஹெக்டேவும் முக்கிய கதாபாத்திரத்தில் மமிதா பைஜூவும் நடித்துள்ளனர். மேலும் பிரியாமணி, பாபி தியோல், கவுதம் மேனன், நரேன் ஆகியோர் இப்படத்தில் நடித்துள்ளனர். இந்த படத்திற்கு அனிருத் இசையமைத்துள்ளார். விஜய் நடித்துள்ள ‘ஜனநாயகன்’ படத்திற்கான அனைத்து பணிகளையும் முடித்து கடந்த மாதம் தணிக்கைக்கு அனுப்பிய படக்குழு இதுவரை தணிக்கை சான்றிதழ் கிடைக்காததால் படத்தை வெளியிடுவதில் சிக்கல் ஏற்பட்டுள்ளது. வரும் 9ம் தேதி ரிலீஸ் என அறிவிக்கப்பட்டிருக்கும் நிலையில் இதுவரை தணிக்கை சான்றிதழ் கிடைக்காததால் படத்தை வெளியிடுவதில் சிக்கல் ஏற்பட்டுள்ளது. சென்னையில் முதல்நாள் காட்சிக்கான முன்பதிவு தொடங்காமல் இருக்கும் நிலையில், மற்ற மாவட்டங்களில் முன்பதிவுகள் தொடங்கப்பட்டுள்ளன. இருப்பினும் தணிக்கை சான்றிதழ் கிடைக்காததால் ரசிகர்கள் அதிருப்தியில் உள்ளனர்.

# முகம்மது சிராஜ் அதிர்ஷ்டம் இல்லாதவர்; வெளிப்படையாக சொன்ன டி வில்லியர்ஸ்




20 ஓவர் உலகக் கோப்பை கிரிக்கெட் போட்டி அடுத்த மாதம் 7ஆம் தேதி முதல் மார்ச் 8ஆம் தேதி வரை நடைபெறுகிறது. இந்தியா மற்றும் இலங்கையில் இந்த போட்டிகள் நடைபெற உள்ளன. 20 ஓவர் உலகக் கோப்பையில் நடப்பு சாம்பியனாக இந்தியா உள்ள நிலையில், இந்த முறை தாய்மண்ணில் போட்டிகள் நடைபெறுவதால் சாம்பியன் பட்டத்தை தக்கவைக்க வேண்டும் என்பதில் இந்திய அணி தீவிரமாக உள்ளது.20 ஓவர் உலகக் கோப்பைக்கான இந்திய அணியும் அறிவிக்கப்பட்டுள்ளது. இதில் முன்னணி வேகப்பந்து வீச்சாளர் முகமது சிராஜுக்கு இடம் கிடைக்கவில்லை. இது கிரிக்கெட் ரசிகர்கள் மத்தியில் அதிகமாக பேசப்பட்டது.

இந்த நிலையில், முகமது சிராஜுக்கு அணியில் இடம் கிடைக்காதது குறித்து தென் ஆப்பிரிக்காவைச் சேர்ந்த முன்னாள் கிரிக்கெட் வீரர் கருத்து தெரிவித்துள்ளார். இது தொடர்பாக டி வில்லியர்ஸ் கூறியிருப்பதாவது:“முகமது சிராஜ் ஒருநாள் போட்டிக்கான இந்திய அணியில் இடம் பெற்றிருந்தாலும், டி20 உலகக் கோப்பையில் வாய்ப்பு கிடைக்கவில்லை. சிராஜ் அதிர்ஷ்டம் இல்லாதவர். ஏனெனில் இந்திய அணியில் பும்ரா, அர்ஷ்தீப் சிங் ஆகியோர் உள்ளனர். எனவே மூன்றாவது வேகப்பந்து வீச்சாளர்சிறிதளவு பேட்டிங் தெரிந்த வீரராக இருக்க வேண்டும் என்பதற்காக ஹர்ஷித் ராணாவை அவர்கள் தேர்வு செய்துள்ளார்கள். ஹர்திக் பாண்ட்யாவும் பேட்டிங் செய்யக்கூடியவர். அதேபோல், மூன்றாவது வேகப்பந்து வீச்சாளர் முழுநேர வேகப்பந்து வீச்சாளராக இருக்கக் கூடாது என்று தேர்வுக் குழுவினர் நினைத்திருக்கலாம். அதனாலேயே முகமது சிராஜை தவிர்த்து ஹர்ஷித் ராணாவை தேர்வு செய்துள்ளனர். இந்திய அணி தற்போது பேட்டிங்கில் வலுவாக இருக்க வேண்டும் என்பதில் கவனமாக செயல்படுகிறது. அதுவும் சிராஜ் தேர்விற்கு தடையாக இருந்திருக்கலாம்” என்று தெரிவித்துள்ளார்.

# ஒரே ஓவரில் 34 ரன்கள்...மஹாராஜ் பந்தை பறக்கவிட்ட பேர்ஸ்டோ ‘எஸ்ஏ20’ தொடரில் புதிய சாதனை|

இந்தியாவில் நடைபெறும் ஐ.பி.எல். போன்று தென் ஆப்பிரிக்காவில் எஸ்.ஏ. டி20 லீக் தொடர் நடைபெற்று வருகிறது. இந்த தொடரில் டர்பன் சூப்பர் ஜெயண்ட்ஸ், ஜோபர்க் சூப்பர் கிங்ஸ், பார்ல் ராயல்ஸ், பிரிட்டோரியா கேப்பிடல்ஸ், எம்.ஐ கேப்டவுன், சன்ரைசர்ஸ் ஈஸ்டன் கேப் என ஆறு அணிகள் பங்கேற்று விளையாடி வருகின்றன.

அதில் நேற்று செஞ்சூரியன் மைதானத்தில் நடைபெற்ற 14வது போட்டியில் பிரிட்டோரியா கேப்பிட்டல்ஸ் மற்றும் சன்ரைசர்ஸ் ஈஸ்டர்ன் கேப் அணிகள் மோதின. அந்தப் போட்டியில் டாஸ் வென்ற பிரிட்டோரியா முதலில் பேட்டிங் செய்வதாக தீர்மானித்து 20 ஓவரில் 176/7 ரன்கள் குவித்தது.

அடுத்து விளையாடிய சன்ரைசர்ஸ் அணிக்கு குவிண்டன் டீ காக் அதிரடியாக ரன்களை குவித்தார். அவருடன் ஜோடி சேர்ந்த ஜானி பேர்ஸ்டோ பிரிட்டோரியா பவுலர்களை பந்தாடினார். அப்போது கேசவ் மகாராஜ் 12வது ஓவரை வீசினார். அந்த ஓவரில் ஜானி பேர்ஸ்டோ 34 ரன்களை குவித்தார்.

இதன் மூலம் பேர்ஸ்டோ 2022 முதல் நடைபெற்று வரும் எஸ்ஏ20 தொடரில் ஒரே ஓவரில் அதிக ரன்கள் குவித்த வீரர் என்ற சாதனையை படைத்தார். மறுபுறம் ஒரே ஓவரில் அதிக ரன்கள் வழங்கிய பவுலர் என்ற மோசமான சாதனையை மஹாராஜ் படைத்துள்ளார்.

தொடர்ந்து அதிரடி காட்டிய பேர்ஸ்டோ 8 பவுண்டரி 6 சிக்ஸருடன் 85★ (45) ரன்களை குவித்தார். அவருடன் சேர்ந்து கடைசி வரை அவுட்டாகாத டீ காக் 5 பவுண்டரி 6 சிக்ஸருடன் 79★ (41) ரன்கள் எடுத்தார். அதனால் 14.2 ஓவரிலேயே 177/0 ரன்களை குவித்த சன்ரைசர்ஸ் 10 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

# சிக்ஸர் மழை பொழிந்த வைபவ் சூர்யவன்ஷி...19 பந்துகளில் அரைசதம் அடித்து மிரட்டல்

தென்னாப்பிரிக்காவிற்கு சுற்றுப்பயணம் செய்திருக்கும் இந்திய யு19 அணி 3 ஒருநாள் போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடுகிறது. கேப்டன் ஆயுஸ் மாத்ரேவிற்கு ஓய்வளிக்கப்பட்ட நிலையில், இத்தொடரில் இந்திய அணியை சூர்யவன்ஷி வழிநடத்துகிறார்.

இவ்விரு அணிகளுக்கு இடையிலான இரண்டாவது ஒருநாள் போட்டி நேற்று நடந்தது. இந்தப் போட்டியில் முதலில் பேட்டிங் செய்த தென்னாப்பிரிக்க அணி 49.3 ஓவர்களில் 245 ரன்களுக்கு ஆல் அவுட்டானது. ஜேசன் ராவ்ல்ஸ் (114; 113 பந்துகளில் 7 பவுண்டரிகள், 3 சிக்சர்கள்) சதம் அடித்தார். இந்திய அணி பந்து வீச்சாளர்களில், கிஷன் குமார் சிங் 4 விக்கெட்டுகளையும், ஆர்.எஸ். அம்ப்ரிஷ் 2 விக்கெட்டுகளையும், கனிஷ்க் சவுகான், கிலான் படேல் மற்றும் தீபேஷ் தேவேந்திரன் தலா ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

246 ரன்கள் என்ற இலக்குடன் விளையாடிய இந்திய அணியில் தொடக்க வீரராக களமிறங்கிய கேப்டன் வைபவ் சூர்யவன்ஷி சிக்சர் மழை பொழிந்தார். 19 பந்துகளில் அரைசதம் அடித்தார். மொத்தம் 24 பந்துகளில் விளையாடிய வைபவ் 68 (10 சிக்ஸர்கள் ஒரு பவுண்டரி) ரன்கள் எடுத்தார்.

மோசமான வெளிச்சம் காரணமாக ஆட்டம் தடைபட்ட நிலையில், இந்தியாவிற்கு வெற்றி இலக்காக 174 ரன்கள் நிர்ணயிக்கப்பட்டது. இந்திய அணி 8 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் வெற்றிபெற்று 3 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரை கைப்பற்றி அசத்தியது. மூன்று போட்டிகள் கொண்ட தொடரின் முதல் போட்டியில், டக்வொர்த் லூயிஸ் முறைப்படி இந்தியா 25 ரன்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றிருந்தது குறிப்பிடத்தக்கது.

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, Kil-paukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 638751. Editor: KANI RAJA V. CELL: 9443699066